முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புலத்தீசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

19.05.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **கனிவுமிக்க அவதாரம் கொண்ட**
**கருணாமூர்த்தியே அரங்கராசா**
**துணிவுபட மக்களை நோக்கி**
**தயவு கூட்டி வழிநடத்தும் தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் **விகாரி விடை திங்கள்**
**ஆசிபட பஞ்சதிகதி கதிர் வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 5ம் நாள் 19.05.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி**
3. **ஆசியை புலத்தீசர் யானும்**
அறிவிப்பேன் உலகோர் நலம்பெற
வாசி வென்ற கலியுக ஞானி
வள்ளலின் அவதார யோகி அரங்கன்
4. அரங்கன் சன்மார்க்க நெறி
அகலாது தொடரும் மக்கள்
வரங்களென வாழ்வும் வளமும்
வசதிமிக்க பொருள் பலமும்
5. பலமான மேலவர்கள் தயவும்
பாதுகாப்பும் மிகுந்த வாழ்வும்
வளமான இயற்கை பலமும்
வையகத்துள் கண்டு சிறப்பர்
6. சிறப்பான தான தருமமுடன்
சிந்தை தெளிவு பெறும் ஞானம்
அறமாக வழங்கும் அரங்கன் தயவும்
ஆன்மீக உண்மை அறிவுடன் பெற்று சிறப்பர்
7. சிறப்பான நிலை உலகடைய
சேவை கொண்டே ஞானமருளும்
ஆறுமுக அரங்கன் கொள்கையே
ஆன்மீக ஞானஆட்சி தரக் கூடும்
8. கூடுமே ஞானிகள் ஆட்சியுமாக
குருராசன் தலைமை ஏற்கும்
நாடும் மக்களும் சோடை இல்லா
ஞானபலம் பெற்று சிறக்கும்
9. சிறக்குமே கலியிடர்கள் விலகி
சேவை நோக்காக எல்லாத்துறைகளும்
அறம் வழிக்கு மாறி சிறக்கும்
அதிகாரிகளும் பேராசை வழி செல்லா

10. செல்லா லஞ்ச லாவண்யமில்லா
சிறப்புடனே கடமைகள் ஆற்றி
வல்லமை பெறும் சகலதுறையும்
வளமுற்று அரங்கன் ஆளுமை

11. ஆளுமை பெறும் ஞானவான்கள் வழி
அற்புதம் நிகழ்த்த வந்த அரங்கா
ஆறுமுகன் துணைபடவே உன் அவதார
ஆன்மீக ஞானம் வெற்றி பெறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் புலத்தீசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

கனிவுமிக்க அவதாரமாய் முருகப்பெருமானின் சக்தி வடிவமாய் அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே, கருணாமூர்த்தியே ஞானதேசிகா கனிவுடன் மக்களை காத்து தயவினை பெருக்கி உலகோரை ஞானவழியில் சற்குருவாய் நின்று வழிநடத்துகின்ற அரங்கமகா தேசிகனே, அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 5ம் நாள் 19.05.2019, ஞாயிற்றுக்கிழமை இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே புலத்தீசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புலத்தீசர்.

வாசி யோகங்கள் செய்து வாசியை வென்றிட்ட கலியுக மகா ஞானி வள்ளலாரின் அவதாரயோகி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உபதேசிக்கின்ற ஞானக்கொள்கையாம் சன்மார்க்க நெறியினை ஏற்றுக் கொண்டு சன்மார்க்க நெறியிலிருந்து அகலாமல் பின்தொடரும் மக்கள் அரங்கனின் அருளாசிகளையும் வரங்களையும் பெற்று வசதிமிக்க வாழ்வினை ஞானிகள் துணைபட தயவும் பெற்று ஞானிகளின் அருள் பாதுகாப்பு மிகுந்த வாழ்வினை வாழ்வார்கள். உலக மக்கள் அரங்கரின் கொள்கைகளை பின்பற்றி வர, நாடெங்கும் நல்ல பருவமழை பெய்து இயற்கை வளம் பெருகி இயற்கை பாதுகாப்பையும் பெற்று சிறப்படைவார்கள். தானதருமங்களை சிறப்பாக செய்வதுடன் சிந்தையில் தெளிவு உண்டாகி ஞானம்தனையும் தருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆன்மீக உண்மை அறிவையும் பெற்று சிறப்படைவார்கள்.

சிறப்பான நிலையை இந்த உலகம் அடைய வேண்டுமெனில் தொண்டுகள் மூலமாக உலகிற்கு ஞானத்தை அருளுகின்ற ஆறுமுக அரங்கரின் தூய ஞானநெறி கொள்கைகளே இவ்வுலகினில் ஞானத்தையும் ஞானஆட்சியையும் தர முடியுமப்பா.

அரங்கமகானின் கொள்கைகளை உலக மக்கள் எல்லாம் ஏற்று நடக்க உலகினில் ஞானம் பெருகி ஞானஆட்சியும் ஞானிகள் ஆட்சியாக அமைந்திடும். உலகமே குருராசன் ஆறுமுக அரங்கரின் தலைமையை ஏற்றுக் கொள்ளும் நாடும், நாட்டு மக்களும் குற்றமற்ற வீண் போகாத ஞானபலத்தினை பெற்று சிறப்படைவார்கள். உலகினில் கலியுகத்தின் துன்பம் எல்லாம் விலகி தொண்டு மனப்பான்மையுடன் நாட்டின் எல்லா துறைகளும் நடந்து அறவழிக்கு மாற்றமடைந்து மக்கள் சேவையை மையமாகக் கொண்டு செயல்பட்டு சிறப்படையும் அதிகாரிகளும் பேராசையின் வழி சென்று குற்றங்களை செய்யாமலும் லஞ்சலாவண்யங்களை விட்டுவிட்டு அவரவரும் தம்தம் கடமைகளை உணர்ந்து சிறப்பாக பொது மக்களும் அரசிற்கும் கடமையாற்றி வருவார்கள். நாட்டில் உள்ள அனைத்து துறைகளும் வளமும் வளர்ச்சியும் பெற்று சிறப்படையும். நாடு வளம்பல பெற்று அரங்கரின் ஞானஆட்சியை நாடு பெறும்.

உலகினில் ஞானவான்கள் மூலமாக ஞானஆட்சியை நிகழ்த்திட வந்திட்ட ஞானத்தலைவனே அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானின் துணையுடன் உமது அவதார நோக்கம் நிறைவேறி உமது அற்புத ஆன்மீக ஞானம் உலகினில் வெற்றி பெறுமப்பா எனக் கூறுகிறார் மகான் புலத்தீசர்.

–சுபம்–